# சங்க இலக்கியங்களில் திருமால் வழிபாடு



**இரா. உஷா & Dr. Sobana Swaminathan**
**Department of School of Music and Fine Arts**
**VISTAS Vels University, Pallavaram, Chennai, India.**
**E-mail : ushavpathy30@gmail.com**

ஆய்வு நோக்கம்:
சங்க இலக்கியங்களில் திருமால் வழிபாடு பரவலாக காணப்படுகிறது. அச்சங்க இலக்கியங்களில் காட்டும் திருமால் வழிபாட்டு நிகழ்வுகளில் குறிப்பிட்ட செய்திகள் எவ்வாறு இடம் பெற்றுள்ளன என்பதை விவரிப்பதே இந்த ஆய்வின் நோக்கம்.

**ஆய்வுச் சுருக்கம்:**
சங்கத்தமிழ் இலக்கியங்களில் மக்கள் வாழ்வியல், காதல், வீரம், கலை, தொழில், வணிகம் முதலியவற்றைப் பற்றி எடுத்துரைக்கின்றன. அவற்றினுள் இறைவனை பற்றியும், இறைவனின் பெருமை, அவதாரம் இறை இயல்புகள் பற்றியும் செய்திகள் கூறப்பட்டுள்ளன. பழம் தமிழ் நூலான தொல்காப்பியத்தில் திருமால் பற்றி குறிப்புகள் காணப்படுகின்றன. பின் சங்க இலக்கியங்களான எட்டுத்தொகைஇ பத்துப்பாட்டு ஆகியவற்றிலும் திருமாலின் புகழ், திருமாலின் அவதாரம், மற்றும் தத்துவங்கள் விரவிக் கிடக்கின்றன. சங்க இலக்கியங்களில் திருமால் பற்றிய செய்திகள் எவ்வாறு கூறப்பட்டிருக்கிறது என்பதை கூறுவதே இந்த ஆய்வின் நோக்கம்.

**திறவுச்சொற்கள்:**
சங்க இலக்கியம் - திருமால், வைணவம்இ தொல்காப்பியம் - மாயோன், பனைகொடி, கண்ணன், இராமன்.

**முன்னுரை**:

உலகின் தொன்மையான மொழி தமிழ்மொழி. “கல் தோன்றி மண் தோன்றா காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்த குடி.” என்ற புற இலக்கண நூல்களில் கூறப்பட்டதைக் கொண்டு தமிழின் பழமையை அறியலாம்.

கி.மு. 2-ம் நூற்றாண்டிலிருந்துஇ கி.பி. 2-ம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட காலம் சங்க காலம் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். பாண்டிய மன்னர்கள் சங்கம் அமைத்து தமிழ் மொழியை வளர்த்தான். சங்க காலம் மூன்று வகையாக அறியப்படுகிறது. அவை முதற்ச்சங்கம்இ இடைச்சங்கம் மற்றும் கடைச்சங்கம். இறையனாரின் களவியல் உரைமூலம் சங்கங்கள் பற்றிய செய்திகளை அறியமுடிகிறது. சங்க இலக்கிய நூல்களை எட்டுத்தொகைஇ பத்துப்பாட்டு ஆகிய நூல்களில் மக்களின் வாழ்வு முறை வீரம்இ காதல் அறம் போன்றவை மட்டுமல்லாமல் இறை பக்தியையும்இ வேந்தனைப் பற்றியும் இயற்கையை வர்ணித்துப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

பண்டைய நூல்களில் தமிழர் நிலத்தை ஐந்து வகையாக பிரித்து குறிப்பிடுகின்றனர். அவை குறிஞ்சி முல்லை, மருதம், நெய்தல் பாலை என்பன. பின் அந்நிலத்திற்குரிய தெய்வம் தொழில் ஆகியவையும் காணப்படுகின்றன. இவற்றில் முல்லை நிலக்கடவுளான மாயோன் (திருமால்) பற்றிய குறிப்புகள் தொல்காப்பியம் முதல் எட்டுத்தொகை பத்துப்பாட்டு ஆகிய நூல்களில் இடம் பெற்றுள்ளன. முதலில் தமிழின் மிகப் பழமையான நூலான தொல்காப்பியத்தில் திருமாலினைப் பற்றிய செய்திகள் எவ்வாறு இடம் பெற்றுள்ளன என்று கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

1. தொல் காப்பியம்:

தொல்காப்பியத்தை இயற்றியவர் தொல்காப்பியர். பழந்தமிழ் நூல்களில் முதன்மையானது. இந்நூல் இலக்கண எழுத்திற்கும், சொல்லுக்கும் மட்டுமன்றி இலக்கியத்திற்கும் இலக்கணம் வகுத்த நூல். இந்நூலின் பொருளதிகாரத்தில் மக்களின் அகவாழ்க்கைஇ புறவாழ்க்கை பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

1.1. “தொல்காப்பியத்தில் திருமால் வழிபாடு:

மாயோன் மேய காடுறை யுலகமும்…” (தொல். பொருள். அகத்திணை)

என்பது தொல்காப்பியத்தின் பொருளதிகாரம் அகத்திணையில் இடம் பெற்றுள்ள நூற்பா, முல்லை நிலக்கடவுளான மாயோன் (திருமால்) குறிப்பிடப்படுகிறார். மாயோன் என்ற சொல் கரிய நிறத்தை உடையவன் என்று பொருள்படுகிறது.

மாயோன் என்ற சொல் மட்டுமன்றி மால் என்ற சொல்லும் பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படுகிறது. “மாயோன் அன்ன மால்வரைக் கவாஅன்” என்ற தொடரில் திருமால் இயற்கையின் பேருருவாகிய இறைவன் என்பதை உணர்த்துகிறது.

1.2. தொல்காப்பியத்தில்…

“மாயோன் மேய மண்பெருஞ் சிறப்பிற்
நாவா விழப்புகழ் பூவை நிலையும்…”

என்ற நூற்பா புறத்திணையில் அமையும் பூவை நிலை என்ற துறையை குறிப்பிடுவது. பூவை நிலை என்பது நாடு காக்கும் மன்னனை சிறப்பித்து பாடுவது. மாயோன் - முதல்வன் - மன்னன் மூத்த குடிமகன் என்பதால் மன்னனை மாயோனுடன் ஒப்பிட்டு கூறியுள்ளார் என்று நச்சினார்- கினியாரின் உரை விளக்கத்தில் குறிப்பிட்டு உள்ளார்.

1.3. தொல்காப்பியத்தில் கூறியுள்ள, குறிப்பிடப்பட்டுள்ள திருமால் நெறியில் கண்ணனை தெய்வமாகக் கொண்டு, அவனைக் குழந்தையாக பாவித்தல், மற்றும் பெண்கள் அந்த இனத்து ஆண் மக்களிடமும், ஆண் குழந்தைகள் மட்டுமின்றி கடவுளிடமும், கடவுளைக் குழந்தையாக பாவிக்குமிடத்தும், காமப்பகுதி செலுத்துவதற்கு உரியவர் என்ற கருத்து இடம் பெற்றுள்ளது.

“காமப்பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கிலும் என்மனார் புலவர்…” (தொல். புறத்திணையில் - 23)

போன்ற நூற்பாவின் மூலம் அறியலாம். தெய்வக்குழந்தையாகிய கண்ணனிடம் ஆயர்குலப் பெண்கள் கொண்ட காதல் வெள்ளத்தை உட்கொண்டு கூறப்பட்டதாகக் கொள்ளலாம்.

நா. சுப்புரெட்டியார் வைணவமும் தமிழிலும் என்ற நூலில் தொல்- காப்பியத்திற்கு முன்பே திருமால் வழிபாடு தமிழகத்தில் இருந்திருக்க முடியம் என்று குறிப்பிட்டுள்ளார்.

1.4. வாசுதேவனான கண்ணனை, பாலதேவருடன் இணைத்து போற்றி வணங்கும் முறை வடநாட்டில் மட்டும் அல்லாமல் தமிழ் நாட்டிற்கும் பரவி உள்ளது என்பதை தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரத்தில் ‘பனை’ என்ற சொல்லுக்கு விளக்கம் தரும் குறிப்பு இடம் பெற்றுள்ளது.

“கொடிமுன் வரினே ஐஅவண் நிற்பக்
கடிநிலை இன்றே வல்லெழுத்து மிகுதி…” (தொல். உயிர்மயங்கியல் - 83)

பனை ூ கொடி ஸ்ரீ பனங்கொடி என்று வராமல் பனைகொடி என்றே வரும் என்று தொல்காப்பியர் சுட்டிக் காட்டுவதன் மூலம் அக்காலத்தில் ‘பனைகொடி’ வழக்கில் இருந்ததென்றும்இ பனைகொடி நம்பி மூத்தபிரானான பலராமனுக்குரியது. இதன்மூலம் சங்கர்ஷண வாசுதேவர்கள் (கண்ணன்இ பலராமன்) வடநாட்டில் மட்டுமின்றி

தமிழதக்திலும்இ தொன்றுதொட்டு வழிபாடு செய்யப்பட்ட அவதார மூர்த்திகள் என்று அறியப்படுகிறது.

தொல்காப்பியத்திற்கு பின் பழந்தமிழ் இலக்கிய நூல்கள் எட்டுத்தொகைஇ பத்துப்பாட்டு ஆகிய பதினெட்டு நூல்களும்இ திருக்குறள் முதலான பதிணென் கீழ்கணக்கு நூல்களும்இ சிலப்பதிகாரம்இ மணிமேகலைஇ இறையனார் களவியலுரை என்பவை ஆகும். இவற்றில் எட்டுத்தொகையும்இ பத்துப்பாட்டும் சங்க கால நூல்களாகும்.

**2. சங்க இலக்கியத்தில் திருமால் வழிபாடு: (வைணவ கூறுகள்)**

சங்க இலக்கிய நூல்களான எட்டுத்தொகை (8) பத்துப்பாட்டு (10) ஆகிய பதினெட்டு நூல்களிலும் வைணவ (திருமால்) கூறுகள் விரவிக் கிடக்கின்றன.

2.1. எட்டுத்தொகை: (எட்டுத் தொகையுள் அமைந்த நூல்கள்)

2.1.1. புறநானூறு - திருமால் வழிபாடு (வைணவக் கூறுகள்)

புறம் சார்ந்த நூலாகிய புறநானூற்றில் திருமால்இ இராமன் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. புறநானூற்றின் 174-வது பாடலில் திருமால் பற்றிய நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன.

"அணங்குடை யவுணர் கணங்கொண்டொளித்தெனச்
சேண் விளங்கு சிறப்பின் ஞாயிறு காணாது… (174)

என்ற பாடலில் "அசுரர்கள் சூரியனை (ஞாயிற்றினை) மறைத்தனர். சூரியனை காணாது இருள் உலகத்தாரின் கண்களை மறைத்தது. உலகத்தாரின் துன்பம் தீர்ப்பதர்க்காக வலிமையுடைய திருமால் (கண்ணன்) சூரியனை மீட்டு ஆகாயத்தில் நிறுத்தினார் போன்று" என்று குறிப்பிடப்படுகிறது. (இந்த நிகழ்ச்சிக்கு வரலாறு அறியப்படவில்லை).

2.1.1.2. புறநானூற்றின் 378-வது பாடலில் இராமயண நிகழ்ச்சி பற்றி குறிப்பு காணப்படுகிறது.

"கடுந்தெற விராமனுடன் புணர் சீதையை
வலித்தகை யரக்கன் வௌவிய ஞான்றை…"

என்ற பாடல் வரிகளில் சோழ மன்னன் செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னியை ஊண் பொதி நகங்குடையோர் என்ற புலவர் பாடும்போது மன்னன் பரிசளித்த அணிகலன்களைத் தம் சுற்றத்தார் எடுத்து எதை எவ்வாறு எவ்விடத்தில் அணிவது என்று திகைத்ததைஇ இராவணனால் கவர்ந்து செல்லப்பட்ட சீதை எறிந்த அணிகளங்களை குரங்குகள் எடுத்து அவற்றை எவ்வாறு அணிவது என்று அறியாமல் விரலுக்குரியவைகளை செவியிலும்இ செவிக்குரியதை விரலிலும்இ இடையில் அணிவதை கழுத்திலும் மாறி மாறி அணிந்தன என்று இராமாயண நிகழ்ச்சியினை உவமையாக்கி நகைச்சுவைப்பட வெளிப்படுத்தியுள்ளார்.

2.1.1.3. மேலும் புறநானூற்றில் மன்னர்களை புகழ்ந்து பாடும் போதும் தெய்வத்துடன் உவமையாக்கி பாடும் மரபு காணப்படுகிறது. 56-வது பாடலில்…

"கடல்வளர் புரிவளை புரையுமேனி
அடல் வெந் நாஞ்சில் பனைக்கொடி யோனும்…"(புறம் 56-3-6)

என்ற பாடல் வரிகளில் கடலில் வளரும் வலம் புரிசங்கை ஒத்த திருநிறத்தை உடையஇ பனைக்கொடியை உடையயோனாகிய பலராமனும்இ கழுவப்பட்ட அழகிய நீலமணி போல் திருமேனியையும்இ வானுற ஓங்கிய கருடக்கொடியையும் உடைய கண்ணனும்

என்று குறிப்பிடப்படுவதால் கண்ணன்இ பலராமன் பற்றிய செய்திகள் வைணவத்தின் தொன்மையை அறிய முடிகிறது.

2.1.1.4. புறநானூற்றின் 58-வது பாடலிலும் பலராமன்இ கண்ணன் பற்றிய குறிப்பை எடுத்துரைக்கிறது.

காவிரிப்பூம்பட்டினத்துப் புலவர் காரிக் கண்ணனார்இ சோழ குராப்பள்ளி துஞ்சிய பெருந்திருமாவளனும் - பாண்டியன் வெள்ளியம்பலத்துத்துஞ்சிய பெருவழுதியும் ஒருங்கு இருந்தாரைப் போற்றிப் பாடியது.

“பால்நிற உருவின் பனைக் கொடியோனும்
நீலநிற உருவின் நேமியோனும் என்று…” (புறம் 58:14-16)

2.1.1.5. புறநானூற்றில் 57-வது பாடலில் காவிரிப் பூம்பட்டினத்து காரிக் கண்ணனார் என்ற புலவர் மன்னனை மாயோனுடன் ஒப்பிட்டுப் பாடியுள்ளார்.

“வல்லார் ஆயினும் வல்லுநர் ஆயினும்
புகழ்தல் உற்றோர்க்கு மாயோன் அன்ன…”

புறநானூறில் முல்லை நிலக் கடவுளான திருமால்இ திருமாலின் அவதாரமான பலராமர்இ கண்ணன்இ இராமன் ஆகியோரைப் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. இவை வைணவ சமய வேரினை அறிவதற்கு சான்றாக விளங்குகிறது.

2.2. அகநானூறு: (திருமால் வழிபாடு)

அகம் சார்ந்த நூல் அகப்பொருள் பற்றி நானூறு பாடல்களைக் கொண்டதால் அகநானூறு என்று பெயர் பெற்றது. அகநானூற்றில் இடம் பெற்றுள்ள திருமால் வழிபாடு என்ற வகையில் 59இ 70இ மற்றும் 220-வது பாடல்களில் கண்ணன்இ இராமன்இ பரசுராம அவதாரத்தின் நிகழ்வுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

2.2.1. 59-வது பாடல்:

“வண்புனல் தொழுறை வார்மணல் அகன்துறை
அண்டர் மகளிர் தண்தழை உடீஇயர்
மரம் செல மிதித்த மாஅல் போல…” (அகநானூறு 59:3-6)

என்ற பாடலில் ஆயர்குல மகளிர் யமுனையாற்றில் நீராடும் போது கண்ணன் விளையாட்டாக ஆடைகளை எடுத்துக் குருந்த மரத்தின் மீதேறினான். நம்பிமூத்தபிரானாகிய பலராமன் அவ்விடம் வர கண்ணன் அம்மகளிர் அனைவரையும் ஒரு சேர மறைக்க முகுந்த மரத்தின் கொம்பினை தாழ்த்திக் கொடுத்தான் என்கின்றது.

2.2.2. மேலும் 220-வது பாடலில்…

“மண் மருங்கு அறுத்த மழுவாள் நெடியோன்
முன் முயன்று அரிதினன் முடித்த வேள்வி…” (அகநானூறு 220:5-9)

என்ற பாடல் வரிகளில் திருமாலின் அவதாரமான பரசுராமன் தன் தந்தையான ஜமதக்கினி முனிவரைக் கொன்ற கார்த்தவீர்யனை மட்டும் அல்லாமல் இருபத்தொன்று தலைமுறை மன்னர் மரபினையும் கொன்று அழிப்பதாக மேற்கொண்ட கொடுஞ்சூளுரை குறிக்கப் பெற்றுள்ளது. இவ்வாறு அகநானூற்றில் திருமாலின் அவதார சிறப்பினை பலவாறு எடுத்துரைக்கின்றன.

2.3. கலித்தொகை: (திருமால் வழிபாடு)

கற்றறிந்தோர் ஏத்தும் கலி என்று புலவர்களால் போற்றப்படுகிறது. கலித்தொகையில் 101இ 104இ 106இ 134-வது பாடல்களில் இராமாயணஇ மகாபாரத நிகழ்வுகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன.

2.3.1. 101-வது பாடலில்...

“அம்சீர் அசைஇயல் கூந்தற் கைநீட்டியான்
நெஞ்சம் பிளந்துஇட்டு நேரார் நடுவண், தன
வஞ்சினம் வாய்த்தானும் போன்ம்”

என்ற பாடலில் ஏறு தழுவும்போது (முல்லை) ஏறு குத்தி அதன் கொம்பினால் புண் உண்டாகி, இரத்தம் வழிந்தாலும் அவன் அஞ்சவில்லை அந்த காட்சி பாரதப் போரில் பாஞ்சாலி கூந்தலைப் பற்றிய துச்சாதனனைக் கொன்று சபதம் வீமனை நினைவுப் படுத்துகிறது.

2.3.2. கலித்தொகையில் இசைக்கருவிகள் ஒலிக்க, மாட்டின் கொம்பிற்களுக்- கிடையில் ஆயர்கள் ஏறு தழுவிய இடம், பாரத போர்க்களம் போல் உள்ளது என்று குறிப்பிடப்படுகிறது.

“புரிபு மேல்சென்ற நூற்றுவர் மடங்க
வரி புனைவல்வில் ஐவர் அட்ட
பொரு களம் போலும் தொழூ உகலி…” (104:57-59)

முல்லைக் கலி பாடல்களில் வீமனின் வீரம், பாதரப் போர்க்களம், அவதார சிறப்புக்கள் போன்ற பல செய்திகள் இடம் பெற்றுள்ளது.

2.4. பரிபாடல்: (திருமால் வழிபாடு)

பரிபாடலில் உள்ள பாடல்களுக்கு இசை அமைத்தோர் பெயரும், பண்ணின் பெயரும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

திருமாலின் உருவ அழகினை பற்றியும், அவதாரச் சிறப்பினைப் பற்றிய பாடல்கள் பரிபாடலில் இடம் பெற்றுள்ளன.

2.4.1. திருமாலை ஆயிரம் பணா முடிகளைக் கொண்ட ஆதிசேடன் மீது பள்ளி கொண்டவன், பொன்னாடை புனைந்தவன். கருடக்கொடி உடையவன் அந்தணரின் அருமறைப் பொருளானவன் என்று போற்றுகிறது. பரிபாடல் திருமாலே முழுமுதற் கடவுள், எங்கும் நிறை கடவுளாக குறிப்பிடுகின்றார்.

“தீயுறுள் தென்றல் நீ! பூவினுள் நாற்றம் நீ!
கல்லினுள் மணியும் நீ! சொல்லினுள் வாய்மை நீ…!” (பரிபாடல்: பாடல்-3)

என திருமாலைப் போற்றுகின்றார்.

2.4.2. பரிபாடலில் 4-வது பாடலில் திருமாலின் பெருமையை இயற்கைப் பொருளோடு ஒப்பிட்டு உணர்த்துகின்றார்.

“நின், வெம்மையும் விளக்கமும் ஞாயிற்று உள,
நின், தன்மையும் சாயலும் திங்கள் உள…” (பரிபாடல் 4:25-32)

இவ்வாறு உருவம் மற்றும் அருவப்பொருட்களில் நீக்கமற நிறைந்- திருக்கின்ற இறைவனாக திருமாலை காண்கிறது பரிபாடல்.

2.4.3. திருமாலின் திருவடி பிறவிப் பெருங்கடலை கடக்க உதவுவது - பிறப்பறுக்கும் திருவடி.

“மா அயோயே மாஅயோயே! மறுபிறப்பு அறுக்கும் மாசுஇல்
சேவடி மணிதிகழ் உருபின் மாஅயோயே…” (பரிபாடல் 3:1-3)

"பிறவாய் பிறப்பு இல்லை - பிறப்பித்தோர் இவையே..." (பரிபாடல் 3:71-72)
திருமால் உலகில் படைத்தல், காத்தல், அழித்தல் போன்றவற்றை செய்வதால் அவன் பிறவாத பிறப்பு இல்லை என்று சிறப்பித்து கூறப்படுகின்றது.
2.4.4. பரிபாடலின் 15-ம் பாடலில் வடவேங்கடத்திற்கு இணையாக திருமலிருங்குன்றமும், முக்தி அளிக்கும் குன்றமாக தெற்கே விளங்குகிறது என்று விளக்குகிறது.
சிலம்பாற்றின் பெருமையும், திருமாலிருஞ்சோலையின் பெருமையைப் பற்றி பரிபாடல் 15-ம் பாட்டில் குறிப்பிடப்படுகிறது.
2.4.5. ஆதிசேடனின் அவதாரமாகவும், கண்ணனின் அண்ணனாகவும் விளங்கும் பலராமனின் வெண் கடம்பு மாலையப் போன்று விளங்கியது சிலம்பாறு என்று அந்த வரிகளில் கூறப்பட்டுள்ளது.
"ஆரா அணர் கயந்தலைத் தன்முன் மார்பின்..." (பரிபாடல் 15:19-23)
மதுரை கூடலழகர் பற்றிய செய்தியும் காணப்படுகிறது. இங்கு திருமால் இருந்த கோலத்தில் காட்சியளிப்பதால் இருந்தையூர் அமர்ந்த செல்வன் என்று இறைவனுக்கு பெயர் ஏற்பட்டது. பரிபாடலில் திருமாலின் பெருமை, கோவில்கள் பற்றிய செய்திகள் மிகவும் விரவிக் கிடக்கின்றன.
3. பத்துப்பாட்டு: (திருமால் வழிபாடு)
பத்துப்பாட்டு, ஆற்றுப்படை நூல்களை திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுபடை போன்ற நூல்களிலும் அகப்பொருள் சார்ந்த நூலான மதுரைக் காஞ்சியிலும் புறப்பொருள் சார்ந்த நூலான மதுரைக் காஞ்சியிலும் திருமாலின் திருமேனி உருவங்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.
3.1. திருமுருகாற்றுப்படை:
புலவர் நக்கீரர், திருஆவினன்குடி பற்றி சொல்லும் போது திருமாலை "புள்ளணி நீள்கொடி செல்வன் என்றும் காத்தல் கடவுள்" என்று குறிப்பிடுகிறார். (திருமுருகாற்றுப்படை 181)
3.2. பெரும்பாணாற்றுப்படை:
திருமாலைப் பற்றிய செய்திகள் ஆங்காங்கே காணப்படுகின்றன
3.2.1. "இருநிலம் கடந்த திருமறு மார்பின்
முந்நீர் வண்ணன் பிறக்கடை..." (பெரும்பாணாற்றுப்படை 29-30)
என ஈரடியால் மூன்று உலகத்தை அளந்த திருமாலை கூறிப்பிடுகிறார்.
3.2.2. "காந்தள் அம்சிலம்பில் களிறு நீடுகுலைப் படித்தாங்குப்
பாம்பனைப் பள்ளி அமர்ந்தோனே ஆங்கண்..." (பெ.பா. 371-373)
பாம்பணையில் பள்ளி கொண்ட திருமால் மலையில் படிந்த யானைபோல் உள்ளார் என விளக்குகின்றார். பின் திருவெஃகாவில் திருமால் வழிபாடு இருந்ததையும் குறிப்பிடுகின்றார்.
3.2.3. "ஈர் ஐம்பதின்மரும் பொருது களத்து அவிய
பேர் அமர்கடந்த கொடுஞ்சி நெடுந்தேர்..." (415-417)
பாரதப் போர் பற்றியும், வெற்றியைப் பற்றியும், சேர நாட்டிலும், தொண்டை நாட்டிலும் மன்னன் பெற்ற வெற்றியைப் பற்றி பாடும்போது கூறப்பட்டுள்ளது.
3.2.4. "நீலநிற உருவின் நெடியோன் கொப்பூழ்:
நான்முக ஒருவற் பயந்த பல் இதழ்த்

தாமலை பொருட்டின் காண் வரத்தோன்றி" (403-404)
என்ற பாடலில் திருமாலின் கொப்பூழில் இருந்து உதித்த தாமரை மலரில் பிரம்மன் தோன்றினார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3.3. சிறுபாணாற்றுப்படை:

"கரி எரியூட்டிய சவர்கணைத் தூணிப்
பூஉரி கச்சைப் புகழோன் தன்முன்..." (239-242)

என்ற பாடலில் வீமன் (பீமன்) மடை (சமையல்) நூலில் குறிப்பிட்டபடி ஒய்மா நாட்டு நல்லியக்கோடன் அரண்மனையில் பல்வகை உணவுகள் சமைக்கப்பட்டன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3.4. முல்லைப் பாட்டு: (அகப்பொருள் சார்ந்த நூல்)

முல்லைப்பாட்டின் முதல் பாட்டில்:

"நனந்தலை உலகம் வளை, நேமியொடு
வலம்புரி பொரித்த மாதாங்கு தடக்கை..." (1-3)

என்ற பாடலில் காவிரிப் பூம்பட்டினத்தின் பொன் வணிகனாரின் மகன் நம்பூதனார், திருமால் சக்கரப்படையும், சங்கும் கைகளில் ஏந்தியவன் என்றும், மாவலி சக்ரவத்தியிடம் மூன்று அடி மண் கேட்டுப்பின் நெடியோனாய் உலகத்தை அளந்தவன் என்று திருமாலின் உருவம் பற்றியும் அவதாரச் சிறப்பு பற்றியும் உள்ள செய்திகளை மூன்று அடிகளில் இயற்றியுள்ளார்.

3.5. மதுரைக் காஞ்சி: (புறப்பொருள் சார்ந்த நூல்)

"கணம்கொள் அவுணர்க் கடந்த பொலந்தார்
மாயோன் மேய ஓண நல்நாள்..." (590-591)

தலையாலங்கானத்துச் செருவெள்ள பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாடிய புலவர் மாங்குடி மருதனார், மறவர்கள் திருமாலுக்கு உரிய ஓண நாளில் தேறல்கள் உண்டு மகிழ்ந்தனர் என பாடியுள்ளார்.

இதனின்று திருமாலின் திருவோண நாளை மதுரை மாநகரத்தில் சிறப்பாக கொண்டாடினர் என்று அறிய முடிகிறது.

சங்க இலக்கியத்தில் திருமாலின் அவதாரம், வழிபாடும் அதற்கான வழிமுறைப் பற்றியும் பதிவு செய்துள்ளது.

முடிவுரை:

இந்திய நாகரீகத்தின் உயிர் நாடியாக இருப்பது அதன் சமயச் சிந்தனை. இறைவழிபாடு என்பது தமிழர் வாழ்க்கையுடன் ஒன்றியிணைந்திருந்தது. தமிழின் பண்டைய இலக்கண நூலான தொல்காப்பியம், மற்றும் சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகிய நூல்களின் மூலமாக தமிழர்களின் வாழ்க்கை முறை, வீரம், காதல் மற்றும் இறைவழிபாட்டு முறை நமக்கு அறிய முடிகிறது. அவற்றில் திருமாலின் அவதாரங்கள், (கண்ணன், பலராமன், இராமர்) இந்த இலக்கிய சான்றுகள் மூலமாக சங்க காலத்திற்கு முன்பே திருமால் வழிபாடு மக்களிடம் பரவியுள்ளதை அறிய முடிகிறது. மேலும் இராமாயணத்தில் இராமரின் அவதாரப் பொலிவும் மஹாபாரதத்தில் கிருஷ்ணாவதார சிறப்பும் இந்த சங்க இலக்கியங்களில் ஒப்பிட்டு பாடப்பட்டுள்ளன. இந்த குறிப்புகள் மூலம் பக்தி இலக்கிய உலகிற்கு வித்திட்டது அறிய முடிகிறது. சங்க இலக்கியத்தில் உள்ள பாடல்களின் தாக்கம் ஆழ்வார்களின் பாசுரங்களிலும் காணப்படுகிறது. ஆயர்கள் நிலக்கடவுளாக ஆயர்கள் வாழ்வோடு ஒன்றிய திருமாலை

(பெருமாள்) மக்களின் வாழ்வை நிலமும் பொழுதுமாக வைத்து பாடிய பாடல்கள் பக்தி இலக்கியத்திற்கு வித்திட்டதோடு, ஆழ்வார்கள் மற்றும் ஆச்சார்யர்களின் பாசுரங்களுக்கும், இலக்கியத்திற்கும் வித்திட்டு முன்னோடியாக திகழ்கின்றது என்றால் அது மிகையாகாது.

துணை நூல் பட்டியல்:

1. தமிழகப் பண்பாடு - அ.கா. பெருமாள்,
நியூ செஞ்சுரி புக்ஸ் ஹவுஸ், சென்னை
2. தமிழ்ப் பண்பாடு - முனைவர் க.த. திருநாவுக்கரசு
உலக தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை, (2009)
3. திருமால் பரிபாடல் விளக்கம் -
புத்தூர் கிருஷ்ணசாமி ஐயங்கார்.
4. வைணவமும், தமிழும் - நா. சுப்புரெட்டியார்
தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பகம், திருநெல்வேலி. (1998)
5. வைணவ இலக்கிய வகைகள் -
ம.பெ. ஸ்ரீனிவாசா தேவகி பதிப்பகம், சிவகங்கை. (1994)
6. தமிழ் இலக்கியங்களில் வைணவம் - இந்திரா பார்த்தசாரதி,
தமிழ் புத்தகாலயம், சென்னை. (1992)

இணைய ஆதாரங்கள்:

1. சங்க இலக்கியம் - தமிழ் விக்கிப்பீடியா
2. சங்க இலக்கியம் - ஓர் அறிமுகம்
3. புறநானூறு - தமிழ் விக்கிப்பீடியா
4. அகநானூறு - தமிழ் விக்கிப்பீடியா

---